**மின்னஞ்சல் மூலமாக**

அனுப்புநர்
திரு.த. சி. வெங்கடநாதன்MA.,MPhil,
உதவி இயக்குநர்
அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம்,
வேலூர்-7

பெறுநர்
தலைமையாசிரியர்,
ஜூன் / ஜூலை -2024 துணைத் தேர்வு மேல்நிலை முதலாமாண்டு, இரண்டாமாண்டு மற்றும் இடைநிலை தேர்வு மைய பள்ளிகள்.

ந.க.எண்: 002498, 002499 (ம) 002602/அ4/2024 நாள் : 31.08.2024

ஐயா/அம்மையீர்,

பொருள்: அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம் வேலூர்7, ஜூன் / ஜூலை-2024 துணைத் தேர்வு - மேல்நிலை முதலாமாண்டு, இரண்டாமாண்டு மற்றும் இடைநிலை தேர்வு மையங்களுக்கு முதன்மை விடைத்தாட்கள் மற்றும் எழுது பொருட்கள் வழங்கியது - பயன்படுத்தியது போக மீதமுள்ள எழுது பொருட்களின் இருப்பு விவரம் உரிய ஆ படிவத்தில் பூர்த்தி செய்து எழுதுபொருட்கள் ஒப்படைக்க கோருவது - தொடர்பாக.

பார்வை
1. இவ்வலுவலக கடிதம் ந.க.எண்:002499/அ4/2024 நாள்:14.06.2024, 002498/அ4/2024 நாள்:14.06.2024 (ம) 002602/அ4/2024 நாள்:24.06.2024
2. சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடிதம் ந.க.எண்:101895/கே/2024, நாள்:20.08.2024 மற்றும் 101895/கே/2024. நாள்:30.08.2024.

-------------

பார்வை (1)இல் கண்ட கடிதத்துடன் ஜூன் / ஜூலை-2024 துணைத் தேர்வுக்கான மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு மற்றும் இடைநிலை தேர்வுகளுக்கு முதன்மை விடைத்தாட்கள் மற்றும் எழுதுபொருட்கள் **அ-படிவத்தில்** அனுப்பி வைக்கப்பட்டன. பார்வை(2)இல் கண்ட கடிதத்தில் அறிவுறுத்தியவாறு மேற்படி தேர்விற்கு பயன்படுத்தியது போக மீதமுள்ள எழுதுபொருட்களை **ஆ படிவத்தில்** பூர்த்தி செய்து பாடவாரியாக **தனித் தனியாக பண்டல் கட்டி** தமது தேர்வு மையத்தில் எவ்வகையான வெற்று முதன்மை விடைத்தாட்கள் / கூடுதல் விடைத்தாட்கள் (Ruled / Unruled) **இறுத்திக்கொள்ளப்படவில்லை** என்ற அறிக்கையுடன் 23.08.2024 மற்றும் 27.08.2024 ஆகிய தேதிகளில் மீதமுள்ள விடைத்தாட்களை வேலூர் அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு 21.08.2024 ஆம் தேதியிட்ட மின்னஞ்சல் கடிதம் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இணைப்பில் கண்ட தேர்வு மைய பள்ளிகள் இதுநாள் வரை ஒப்படைக்கப்படவில்லை.

த.பி.பா..

**மின்னஞ்சல் மூலமாக**



எனவே இக்கடிதம் கிடைக்கப்பெற்ற மறுதினமே மீதமுள்ள எழுதுபொருட்களை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒப்படைக்கத் தவறும் தேர்வு மைய பள்ளிகளின் விவரங்களை அரசுத் தேர்வுகள் துறை இயக்குநரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்ற தகவலையும் கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒம்/-
உதவி இயக்குநர்

**நகல்:**

1. இயக்குநர், அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை-6 –தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. **முதன்மைக் கல்வி அலுவலர் வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.**
3. **மாவட்டக் கல்வி அலுவலர் வேலூர், திருப்பத்தூர் மற்றும் இராணிப்பேட்டை – தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும் அனுப்பப்படுகிறது.**